செ.வெ.எண்:457

நாள்:19.06.2008

## செய்தி வெளியீடு – 19.6.2008

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 19.6.2008 அன்று சென்னை–தலைமைச் செயலகம்–நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் முதல்நாள் மாநாட்டில்; கலந்தாலோசனைக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் பின்வருமாறு :

1. முதலில் – தமிழக அரசு செயல்படுத்திவரும் மிகப்பெரும் திட்டங்கள் அதாவது "மெகா" திட்டங்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கனவே தர்மபுரியில் 'திட்ட அலுவலகம்' தொடங்கப்பட்டுள்ள நிலையில், ஜப்பான் வங்கியின் ஒப்புதலுடன் இறுதி செய்யப்பட்டுள்ள கால அட்டவணைப்படி மற்ற அனைத்து செயல்பாடுகளையும் மேற்கொண்டு திட்டத்தை நிறைவேற்றுவதெனவும்;

2. இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை 2009, ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவேற்றி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட மக்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணிப்பதென்றும்;

3. கோவையில் அமையவுள்ள உலகத் தரத்திலான மத்திய பல்கலைக்கழகத்திற்குத் தேவையான நிலத்தையும்; திருச்சியில் அமையவுள்ள மேலாண்மைக்கான மத்திய நிறுவனத்திற்கு (I.I.M.) தேவையான நிலத்தையும் மிக விரைவாக தேர்வு செய்து மத்திய அரசுக்கு தெரிவிப்பதென்றும்;

4. திருவாரூரில் அமையவுள்ள மத்திய பல்கலைக்கழகத்தை இந்த ஆண்டே தொடங்கி நடத்துவதற்கு மத்திய அரசு முன்வந்துள்ள நிலையில், நிரந்தர கட்டடங்கள் கட்டப்படுவதற்கு முன்பு தற்காலிகமாக கட்டட வசதிகளை உடனடியாக ஆய்வு செய்து மத்திய அரசுக்கு அறிவிப்பதென்றும்;

5. பெரம்பலூர், விழுப்புரம், திருவாரூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் அமையவுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கான நிலங்களை உடனடியாக ஒப்படைக்க உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்வதென்றும்;

6. சென்னை அரசு பொது மருத்துவமனையில் நெரிசலைக் குறைக்கும் வகையில், பெண்களுக்கான சிறப்பு மருத்துவமனை, முதியோர்களுக்கான சிறப்பு மருத்துவமனை, வெளிநோயாளிகளுக்கான சிறப்புப் பிரிவு, சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளை பழைய மத்திய சிறை இருந்த இடத்தில் 10 ஏக்கர் பரப்பளவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதென்றும்; ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்கான புதிய கட்டட வசதிகளை பொதுப்பணித்துறைக்குரிய நிலத்தில் விரைவாக செய்து முடிப்பதென்றும்;

7. ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமையவுள்ள புதிய சட்டப்பேரவை – தலைமைச் செயலக வளாகத்திற்கான கட்டிடப் பணிகளை 2008, அக்டோபர் மாதத்தில் தொடங்கி, 2010 மார்ச்சுக்குள் நிறைவு செய்வதென்றும்;

8. சென்னை–கோட்டூர்புரத்தில் 8 ஏக்கர் நிலப்பரப்பில் 100 கோடி ரூபாய்ச் செலவில் அமையவுள்ள உலகத் தரத்திலான மாநில நூலகத்திற்குரிய கட்டடப் பணிகளை 2008,அக்டோபர் மாதத்தில் தொடங்கி, 2010 ஏப்ரல் மாதத்திற்குள் முழுமை செய்வதென்றும்;

9. சென்னையில் 100 கோடி ரூபாய்ச் செலவில், 358 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள சுற்றுச்சூழல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட உலகத் தரத்திலான 'அடையாறு பூங்கா' அமைப்புப் பணிகளை 2010,டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்வதென்றும்;

10. சென்னை, அண்ணா மேம்பாலத்திற்கு அருகில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் உலகத் தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா அமைப்பதற்கான தொடக்கநிலைப் பணிகளை உடனடியாக மேற்கொள்வதென்றும்;

11. மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டத்தையும், எலியட்ஸ் கடற்கரை அழகுபடுத்தும் திட்டத்தையும் 2009 ஜனவரி மாதத்திற்குள் நிறைவேற்றுவதென்றும்;

12. சென்னை விமான நிலைய விரிவாக்கப் பணிகளையும், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பணிகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவு செய்வதற்கேற்றபடி விரைவுபடுத்துவதென்றும்;

– முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

13. சட்டம்–ஒழுங்கு சீராக பராமரிக்கப்பட்ட போதிலும், இதுவரை கண்டுபிடிக்கப்படாத கொடுங்குற்றங்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்திட – காவல்துறை கண்காணிப்பாளர்கள் புலனாய்வு நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வையிட்டு, குற்றவாளிகளை சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்;

14. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்புகள் மற்றும் சொத்து சம்மந்தப்பட்ட வழக்குகளில், காவல்துறை எந்த அளவுக்கு தலையிட வேண்டுமென்று வரையறை செய்திடவும், அந்த வழக்குகளை பாரபட்சமின்றி கையாளும் முறை பற்றியும், அவை தொடர்பான விசாரணைகளை காலதாமதமின்றி முடித்திடவும் கூடுதல் காவல்துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் குழு ஒன்றினை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைகளின்படி தொடர் நடவடிக்கைகளை எடுப்பதென்றும்;

15. தீவிரவாத சக்திகளின் செயல்பாடுகளை முளையிலேயே கிள்ளியெறிய தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை

மேற்கொள்வதோடு, இதனை ஒரு சமூக பொருளாதார பிரச்சினையாக அணுகி, அதனடிப்படையில் சிறப்பு வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி நடைமுறைபடுத்துவதென்றும்;

16. தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்து அரசு ஆதரவில் வாழ்ந்து வருபவர்களைத் தவிர; சட்டரீதியான ஆவணங்கள் எதுவுமின்றி இருக்கும் வெளி நாட்டினரை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வெளியேற வேண்டுமென்று விளம்பரப்படுத்தி, அதற்குப் பிறகும் வெளியேறாமல் இங்கே இருப்பவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும்;

17. சாதி மற்றும் மதத்தின் பெயரால் கலகம் விளைவிப்பவர்கள் மீதும், கலகத்தைத் தூண்டுபவர்கள்மீதும் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்;

18. கடலோர மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் தங்கள் பகுதியில் உள்ள மீனவர்கள் சர்வதேச எல்லையை கடந்து சென்று மீன்பிடிப்பதால் ஏற்படும் ஆபத்துகளை விளக்கி, அவர்கள் அப்படிச் செய்யாதவாறு எச்சரிக்க வேண்டுமென்றும்; படகுகள் பதிவு செய்வதை விரைவில் முடிக்க வேண்டுமென்றும்; தனியார் டீசல் பங்க்குகள் மூலமாக வழங்கப்படும் மான்ய விலை டீசல் குறித்து பங்க்குகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்றும்;

19. வாகனங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதை கருத்தில்கொண்டு, பாதுகாப்பான சாலைப் பயணத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை அலுவலர்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவோர், வேகக் கட்டுப்பாட்டை மீறுவோர் ஆகியோர் மீது கடுமையான குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட

வேண்டுமென்றும்; சாலை விபத்துக்களைக் குறைக்கும் நோக்கத்தில் மாவட்டங்களில் உள்ள சாலைச் சந்திப்புகளிலும் மற்றும் மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளிலும் தேவையான அளவுக்கு விளக்குகளை அமைப்பது, வேகத் தடைகளை ஏற்படுத்துவது, சாலை விதிகளைப் பின்பற்றுவதற்கான எச்சரிக்கைப் பலகைகளை அமைப்பது போன்ற நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் சம்மந்தப்பட்ட துறைகளோடு இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்; போக்குவரத்துக்குப் பயன்படும் சாலை ஓரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை பாகுபாடின்றி அகற்றிட வேண்டுமென்றும்;

20. பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் முறையாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்றும், வாகன ஓட்டுநர்கள் முறையாகப் பயிற்சி பெற்றவர்களாகவும் உரிமம் பெற்றவர்களாகவும் உள்ளனரா என்றும், வாகனங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்குள் குழந்தைகளை ஏற்றிச் செல்கின்றனரா என்றும் காவல் துறை கண்காணிப் பாளர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

21. மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகள் மூலமாக உணவுப் பொருள்களின் போக்குவரத்தைத் தீவிரமாகக் கண்காணித்து, உணவுப் பொருள்களைக் கடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும்;

– முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9